# நீரில் அலையும் முகம் கவிதைகளில் குழந்தை வளர்ப்பு அழகியல்

**செல்வி.து.கீர்த்தனா**

**உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை**

**டாக்டர். என்.ஜி.பி.கலை அறிவியல் கல்லூரி , கோயம்புத்தூர் - 641048**

**48**

**ஆய்வுச் சுருக்கம்:**

கவிதை என்பது ஓர் அழகியல் உணர்ச்சியுடன் கூடிய இலக்கிய வடிவமாகும்.கவிதைகள் நமக்கு ஒவ்வொரு சூழலுக்கும் ஒவ்வொரு வகையான பொருளைத் தருகின்றன. இக்கட்டுரை பெற்றோர்க்கும் குழந்தைக்குமான உறவு சிக்கலை விவரிகின்றது.மேலும் உளவியலின் இணைப்பு கோட்பாட்டை ஒப்பிட்டு விளக்குவது இதன் நோக்கமாகும்.

**முன்னுரை:**

தமிழ் இலக்கியத்தின் அடிப்படை வடிவம் கவிதையாகும்.கவிதை காலத்திற்குக் காலம் மாற்றம் பெற்று, ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வளர்ச்சியடைந்து வந்துள்ளது. இன்னும் வளர்ந்து கொண்டே இருக்கிறது. பெண்களின் விடுதலையானது நீரில் அலையும் முகம் கவிதையின் வாயிலாக வெளிப்படுத்துகிறது.சிந்தனை மாற்றங்களால் பெண்ணுக்கான விடுதலை சாத்தியமாகியிருக்கிறது. தாய்மார்கள் வேலைக்குச் செல்லுதல் என்பது குழந்தையை தாயிடமிருந்துப் பிரித்து வைக்கிறது. பால் மனம் மாறாத சின்னஞ்சிறிய வயதிலேயே தாயிடம் இருந்து குழந்தைகளின் பிரிவானது நிகழ்ந்துவிடும் சிக்கலை குறித்து இக்கவிதை விரிவாகப் பேசுகிறது.

**வெண்ணிலா கவிதைகளில் தாய் குழந்தை உறவு சிக்கல்:**

தாய்க்கும் குழந்தைக்குமான உறவு குறித்த எழுத்துகளில் தமிழ்க் கவிதை உலகில் அ.வெண்ணிலாவின் கவிதைகள் முக்கியமானவை. அவரது இரவு வரைந்த ஓவியம் மற்றும் நீரில் அலையும் முகம் போன்ற தொகுப்புகள் தாய்- குழந்தை உறவு பற்றி அதிகம் சிந்திக்கின்றன. வெண்ணிலாவின் கவிதைகளில் பெண்ணியம் சார்ந்த ஆய்வுகள் பல வந்திருக்கின்றன. இந்தக் கட்டுரையானது நீரில் அலையும் முகம் தொகுப்பில் உள்ள ,இரண்டு கவிதைகளை மட்டும் மையப்படுத்தி மேற்சொன்ன சிக்கலை ஜான் பவுல்பியின் இணைப்பு கோட்பாடுடன் ஒப்பிட்டு பார்த்து விவாதிக்க முயற்சி செய்கின்றது.

**நீரில் அலையும் முகம் கவிதைகள் :**

நீரில் அலையும் முகம் தொகுப்பில் மொத்தம் 58 கவிதைகள் இடம்பெற்றுள்ளன .இதில் குழந்தைகள் பற்றிய கவிதைகள் 15 . இவற்றினுள் ஒன்று இக்கவிதை.

**" தலை வாருகிறேன்**
**புடவை மாற்றுகிறேன்**
**வேக வேகமாக**
**பைக்குள் பொருட்களை**

**அடைக்கிறேன்**

**இவையெல்லாம்**

**குழந்தைக்குச் சொல்கிறது**

**என் பிரிவை**

**என் பாதங்கள் நகரும்**

**திசையை நோக்கியே**

**தவழ்கிறாள்**

**ச்சே ..சனியன்**

**கிளம்புகிற பொழுது**

**சரியா உயிர வாங்குதே**

**வாய் திட்டுகிறது**

**குழந்தை கையை பிரித்தெடுத்து**

**விரையும் பாதங்கள்**

**ஆசுவாசப்படும் பேருந்தில்**

**அம்மாவின் அருகாமைக்கு**

**ஏங்கும் குழந்தையின் இயல்பு**

**அன்னியமாய்படும் அவசரத்திற்கு**

**கூசிப்போகிறது மனசு**

**அ.வெண்ணிலா**

**(பக்க எண்:47)**

**தாய்மையின் தவிப்பு**

இன்றளவில் தாய்மார்கள் இயந்திர வாழ்க்கை சூழலுக்கு ஏற்ப மாறுகிறார்கள்.அவ்வாறு மாறும் பொழுது குழந்தையை கவனிக்க இயலாத நிலை ஏற்படுகிறது.

அதை இக்கவிதையில்,

**"ச்சே சனியன்**

**கிளம்புகிற பொழுது**

**சரியா உயிர வாங்குதே**

**வாய் திட்டுகிறது"**

வீட்டில் வேலைக்கு செல்லும் அம்மா வேக வேகமாக எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு வேலைக்கு செல்லும் பொழுது தன் பின் குழந்தையானது இடைமறிக்கும் பொழுது எரிச்சலில் திட்டுகிறாள்,ஆனால் இதை அவள் மனதார திட்டவில்லை.

**பொருளாதார நிலை:**

இன்றைய காலச்சூழலில் நடுத்தர குடும்பங்களில் பெண்களும் வேலைக்கு செல்ல வேண்டிய கட்டாயம் இருக்கிறது. பெண்கள் வேலைக்கு செல்ல வேண்டாம் என்று கூறிய காலங்கள் எல்லாம்

மறைந்துவிட்டன.இன்றைய நவீன கால கட்டங்களில் ஒவ்வொரு பொருளின் விலையும் உயர்ந்து வரும் நிலையில் வீட்டில் பொருளாதார நிலையை சமாளிக்க பெண்களும்வேலைக்கு செல்ல வேண்டிய நிலையே உள்ளது.இது பெண்களுக்கு கிடைத்த இருக்கின்ற விடுதலை,இந்த விடுதலையே குழந்தைகளுக்கு சாபமாக இருக்கிறது.

**குழந்தை வளர்ப்பில் தந்தையின் பங்கு:**

நீரில் அலையும் முகம் கவிதைகளில் குழந்தை வளர்ப்பில் தந்தையின் பங்கு எவ்வாறு இருக்கும் என்பதை கூறவில்லை,இருப்பினும் தாய்க்கு சமமாக தந்தையும் குழந்தையை வளர்க்கிறார்களா? என்பது சந்தேகத்துக்குரிய ஒன்றாக இருக்கிறது.

**உறவுமுறை சிக்கல் :**

உறவுமுறை சிக்கல் என்று பார்க்கையில் தாய்க்கும் குழந்தைக்கும் இடையில் சில விரிசல்கள் ஏற்பட்டுகின்றன. வீட்டில் தாத்தா, பாட்டி இருந்தால் அவர்களே குழந்தைகளை கவனமாக பார்த்து கொள்வார்கள்.குழந்தைகளும் தனியாக இருப்பது, கைப்பேசி விளையாட்டிற்கு அடிமையாகமல் இருப்பர்.இதே நீரில் அலையும் முகம் என்ற தொகுப்பில் மற்றொரு கவிதையும் இன்றைய உறவு முறை சிக்கலுக்கு ஏற்றவாறு உள்ளது.

**" என் குழந்தைகளின் கைகளில்**
**கம்ப்யூட்டர் சில்லுகளை கொடுத்து**
**தாத்தாக்களை**
**வாங்கிக் கொண்டது வாழ்க்கை"**

**-நீரில் அலையும் முகம்**
**( பக்க எண்: 49)**

**சமூகத்தில் தாயின் நிலை:**

சமூக பார்வையில் பெண்கள் தனி இடத்தை பெற வேண்டும் . அவர்களது இலட்சியங்களை நிறைவேற வேண்டும் .ஆனால் பொருளாதார அடிப்படையில் குழந்தைகளை பிரிந்து செல்ல வேண்டிய சூழலும் உண்டாகிறது.

பெண்கள் வேலைக்கு செல்லுதல் என்பது சங்கக்காலத் தொட்டு இருந்துள்ளது என்பதை இச் சங்கப்பாடல் முலம் தெரிந்துக் கொள்ள முடிகிறது .

**மான்தசை சொரிந்த வட்டியும் ஆய் மகள்**
**தயிர் கொடு வந்த தசும்பும் நிறைய**
**ஏரின் வாழ்நர் பேரில் அரிவையர்**
**குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணெல்**
**முகத்தனர் கொடுப்ப உகந்தனர் பெயரும்**

**(புறநானூறு - 33)**

**குழந்தையின் மனநிலை:**

குழந்தைகளுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகளை இந்த கவிதையின் மூலம் பேசுகின்றது.

**" அம்மாவின் அருகாமைக்கு**
**ஏங்கும் குழந்தையின் இயல்பு"**

சிறு குழந்தையானது தாயின் பாசத்திற்காகவும் தாய் தன்னுடன் இருக்க வேண்டும் என்றும் ஏங்கும். வேலைக்கு செல்கின்ற தாய் குழந்தையை யாரிடமாவது விடுத்து செல்லும் போது அது ஏக்கமாக பார்க்கும்.இப்படியிருக்கும் குழந்தைகள் தனிமையில் இருக்கும் அல்லது கைப்பேசியில் உள்ள விளையாட்டிற்கு அடிமையாகி விடும்.இது இறுதியில் குழந்தைகளுக்கு பாதிப்பை உண்டாக்குகிறது. இன்றைய காலகட்டங்களில் பெற்றோர்கள் இணையம் மூலம் வீட்டில் இருந்தே வேலைப்பார்க்கிறார்கள்,குழந்தைகளும் இணையத்தின் முலம் தான் படிக்கிறார்கள், இருப்பினும் குழந்தைகளுக்காக பெற்றோர் ஒதுக்கும் நேரம் என்பது குறைவாகவே இருக்கிறது. இதனால் குழந்தையின் மனநிலைகளில் சில பாதிப்புகள் உண்டாகின்றன. இக்கவிதையை இணைப்புக் கோட்பாடு(attachment theory) மூலம் ஒப்பிட்டு பார்க்கலாம்.

இணைப்புக் கோட்பாடு என்பது குழந்தைகளுக்கு அவர்களை பராமரிப்பவர்களுக்கு உள்ள உறவுகளின் வளர்ச்சியை பற்றி விவாதிப்பதில் கவனம் செலுத்துகிறது. இந்த இணைப்பு கோட்பாட்டை இயற்றியவர் ஜான் பவுல்பி (பிப்ரவரி 27 1907 -செப்டம்பர் 2 1990)இவர் பிரிட்டிஷ் உளவியலாளர் ஆவார்.இவர் 1930 களில் தவறான மற்றும் குற்றமற்ற குழந்தைகளுடன் பணிபுரியும் போது உளவியலாளர் ஜான் பவுல்பி இந்த குழந்தைகளுக்கு மற்றவர்களுடன் நெருங்கிய உறவை உருவாக்குவதில் சிக்கல் இருப்பதை கவனித்தார். இங்கு பெற்றோர்க்கும் அவர்களின் குழந்தைக்கும் இடையில் ஆரம்பகால உணர்ச்சி பிணைப்பு ஆரோக்கியமான வளர்ச்சிக்கு முக்கியமானது என்ற முடிவுக்கு பவுல்பி வந்தார். வாழ்க்கையின் ஆரம்பத்தில் இணைப்புகளை உருவாக்குவதன் அவசியம் நிறுவனங்களில் வளரும் அல்லது இளம் வயதிலேயே பெற்றோரிடமிருந்து பிரிக்கப்பட்ட குழந்தைகளுக்கு கடுமையான தாக்கங்களை ஏற்படுத்துகிறது.இப்படி நிறுவனங்களில் வளரும் குழந்தைகள் பெரும்பாலும் எந்த ஒரு பெரியவர்களுடனும் ஒரு இணைப்பை உருவாக்குவதில்லை என்பதை பவுல்பி கவனித்தார். இந்த குழந்தைகள் வயதாகும் போது அவர்களால் அன்பான உறவுகளை உருவாக்க இயலாது. பெற்றோர்கள் குழந்தைகள் பிரிவது என்பது குழந்தைகளுக்கு பெரும் துன்பத்தை ஏற்படுத்தியது என்பதை எல்லாம் இவர் குறிப்பிட்டு உள்ளார்.

**முடிவுரை:**

அ.வெண்ணிலாவின் நீரில் அலையும் முகம் தொகுப்பிலிருந்து எடுக்ககப்பட்ட இவ்விரு கவிதைகள் தாய் – சேய் உறவு சிக்கல்கள் பற்றிய தாய்மையின் தவிப்பு அழகியலை எடுத்துரைக்கின்றது. குழந்தைகளை விடுத்து செல்வது என்பது தாய்மார்களுக்கு குற்ற உணர்ச்சியாகவே உள்ளது.

தாய்மார்கள் வேலைக்கு சென்ற பின் , அங்கு வேலை செய்யும் ஒவ்வொரு நொடியும் தங்கள் குழந்தைகளை நினைத்தப்படி தான் வேலை செய்கிறார்கள். ஆண்களுக்கு நிகராக பெண்கள் வேலைக்கு செல்லுதல் என்பது பெண்களுக்கான உரிமை , பொருளாதார தேவை..இன்றையச் சமுதாயத்தில் தாய்மார்கள் வேலைக்கு செல்லுதல் சரியாக இருந்தாலும் குழந்தைகளுக்கு

இளமையில் அதுவே சாபமாக உள்ளது.தாய்க்கும் குழந்தைக்கும் பிண்ணப்பட்ட மன அழகியலை நீரில் அலையும் முகம் கவிதைகள் எடுத்துரைக்கின்றது.

**பார்வை நூல்கள்:**

**1. நீரில் அலையும் முகம் - அ.வெண்ணிலா பதிப்பு : மூன்றாம் பதிப்பு, அகதி வெளியீடு, அம்மைப்பட்டு, வந்தவாசி**

**2. சங்கப்பாடல்கள்- புறநானூறு கோவூர்கிழார்**